தரை பந்தல், கதிரைகள்,
சில்வர் கப், பீங்கான்
இன்னும் பல
உபகரணங்களை
வாடகைக்கு பெற
நாடுங்கள்
"ஒளி இல்லம்"
210, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கம் : நான்கு
Rigistered as a NewsPaper

# உதயன்

விலை ரூபா 5-00

For all Ceremonies
At your homes
Our service available.
OLI ILLAM
210, Main Street,
[Near St. James Church]
Jaffna.

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 12 வியாழக்கிழமை (25-3-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 118

# கிளாலி பீரங்கித் தாக்குதலில் மருத்துவபீட மாணவன் பலி!

## மற்றும் இருவர் காயம் நேற்று மாலை சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச் 25
இளாலி இறங்குதுறைப் பகுதியில் இருந்து பயணம் மேற்கொள்வதற்காகக் காத்து நின்ற பயணிகளை நோக்கி நேற்று மாலை கடற்படையினர் நடத்திய பீரங்கித் தாக்குதலினால் யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட மாணவர் ஒருவர் மரணமானார். கலைப் பீடத்தைச் சேர்ந்த இரு மாணவர்கள் காயமடைந்தனர்.

நேற்று மாலை 6.00 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றது.

அரசினால் வழங்கப்படும் மகாபொல கொடுப்பனவை தத்தமது சொந்த மாவட்டங்களிலேயே பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற புதிய ஏற்பாட்டின்படி தமக்குரிய மகாபொல பரிசிலைப் பெறுவதற்காக இங்கிருந்து புறப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர் குழுவினரை நோக்கியே இத்தாக்குதல் நடத்தப்பட்டது

இவர்களுக்கு உதவியாகச் சென்ற மாணவர்களே இறந்தும், காயமடைந்தும் உள்ளனர்.

யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீட மூதலாம் வருட மாணவனான வில்சன் நிக்லஸ் ஞான சூரியர் (வயது 21) என்பவரே இச் சம்பவத்தில் மரண மானவர் ஆவார். இவர் கரம்பனில் இருந்து இடம் பெயர்ந்து நல்லூர் கோவில் வீதியில் வசித்து வந்தார்.

கலைப் பீடத்தைச் சேர்ந்தவர்களான சேவியர் டொன் பொஸ்கோ (வயது 24 — கரம்பன்), எஸ். மோகனதாஸ் (வயது 23 — மன்னார்) ஆகிய இருவருமே காயமடைந்தனர். இவர்கள் நேற்றிரவு யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டனர்.

இளாலிக்கரையில் இருந்து இவர்களது படகு புறப்பட இருந்த சமயம் கடற்படையினரின் பீரங்கிப் படகில் இருந்து திடீரெனத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப் படுகிறது.

(இ-15)

# இ. தொ. கா தேர்தல் நிபந்தனை தமிழ் மாநிலத்துக்கு வழி செய்யுமா?

## பௌத்த குருமார் பீதி தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 25
எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் ஐக்கியதேசியக் கட்சியை ஆதரிப்பதற்கு தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தோட்டத் தொழிலாளருக்குச் சில சலுகைகளை வழங்க வேண்டும் என்று நிபந்தனை விதித்திருக்கிறது.

அந்தச் சலுகைகள் வழங்கப்பட்டால், அவை மலையகத்தில் தனித்தமிழ் மாநிலத்தை உருவாக்கும் முயற்சிகளுக்கு உதவும் என்று பௌத்த குருமார் பீதி கொண்டுள்ளனர்.

இதனால் ஐக்கியதேசியக்கட்சியின் நிலை சங்கடமாகியுள்ளதாக அவதானிகள் தெரிவித்திருக்கிறார்கள்.

இ. தொ. காவின் தேர்தல் நிபந்தனைகள், அவற்றைப் பௌத்த குருமாரும் எதிரணியினரும் நோக்கும் விதம், இதனால் ஐ. தே. கட்சிக்கு உண்டாகியுள்ள சங்கடம் என்பன குறித்து திரு. ஹரஷியன் ராஜகருணாயக்கா எழுதி பி.பி.ஸியின் ஒலிபரப்பானகண்ணோட்டத்தில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:-

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரிப்பதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நிபந்தனை விதித்துள்ளது.

இத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியை தாம் ஆதரிக்க வேண்டுமானால் - ஜனாதிபதி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழப் போரில் இதுவரை 15,700 சிப்பாய்கள் ஓட்டம்

திருநெல்வேலியில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்ட 1983 ஜூலை 23 ஆம் திகதி முதல் 1993 ஜனவரி 1 ஆம் திகதி வரை இலங்கை இராணுவத்தில் இருந்து ஓடிச்சென்ற சிப்பாய்களின் எண்ணிக்கை 15 ஆயிரத்து 700 ஆகும்

இவ்வாறு 'ராவய' செய்தி வெளியிட்டுள்ளது.

இப்படியான நிலை நீடிக்குமானால் அதனால் இராணுவத்துக்கு மட்டும் அல்லாது முழுத் தேசத்துக்குமே பாதிப்பு ஏற்படும் பெரிய பிரச்சினை உருவாகும் என்றும் 'ராவய' மேலும் தெரிவித்துள்ளது.

(இ-6)

## தமிழ்நாட்டில் குண்டு வெடிப்பு

சென்னை, மார்ச் 25
தமிழ்நாடு - பெரியகுளம் அருகே நேற்று முன்தினம் நள்ளிரவு இடம்பெற்ற குண்டு வெடிப்பு காரணமாக பாலம் ஒன்று சேதமடைந்தது. அந்த இடத்தில் வெடிக்காத இன்னொரு குண்டை பொலிஸார் கைப்பற்றினர். (இ-எ)

## அளவெட்டியில் ஷெல் வீச்சு!

யாழ்ப்பாணம், மார்ச் 25
அளவெட்டி வடக்கு சினன் கலட்டி இராணுவ முகாமில் இருந்து நேற்று இரவு 8 மணிக்கு சுற்றுப்புறக் குடியிருப்புக்களை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

விளான், அளவெட்டிப் பகுதிகளில் விழுந்து வெடித்த இச் ஷெல்களினால் சில வீடுகள் சேதமடைந்தன. ஷெல் விழுந்த இடங்களை அண்டிய பகுதி மக்கள் பீதியுற்று அயல் கிராமங்களை நோக்கி ஓடிச் சென்றனர்.

ஷெல் தாக்குதல்களுடன் துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன. (இ-15)

## பூஸா முகாமில் 1,500 கைதிகள் சாகும் வரை உண்ணாவிரதம்

### ஞாயிறு தொடக்கம் போராட்டம்

கொழும்பு, மார்ச் 25
விசாரணைகள் எதுவுமின்றி பூஸா தடுப்பு முகாமில் நீண்ட காலம் சிறைவைக்கப் பட்டிருக்கும் சுமார் ஆயிரத்து ஐநூறு கைதிகள் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை முதல் சாகும் வரை உண்ணா விரதம் இருக்கும் போராட்டம் ஒன்றை ஆரம்பிக்கப் போவதாக அறிவித்திருக்கிறார்கள்.

விசாரணை, வழக்கு எதுவுமின்றி தங்களை நீண்டகாலம் தடுத்து வைத்திருப்பதை ஆட்சேபித்தே — 4 கோரிக்கைகளை — முன்வைத்து — அவர்கள் சாகும் வரை உண்ணா விரதம் இருக்கும் போராட்டத்தை ஆரம்பிக்கவிருக்கிறார்கள்.

தமது போராட்டம் தொடர்பாக பூஸா கைதிகள் தெரிவித்திருப்பதாவது:-

எமது நிலைமை குறித்து 1992 டிசம்பரில் பிரதம நீதியரசருக்கு விண்ணப்பம் ஒன்றை அனுப்பினோம். ஆனால் பயன் ஏதும் ஏற்படவில்லை.

1993 ஜனவரியில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்துக்கு இது தொடர்பாக நாம் அனுப்பிய மனுவுக்கு எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### பூஸா முகாம் கைதிகளின் நான்கு கோரிக்கைகள்

சாகும் வரை உண்ணா விரதப் போரில் குதிக்கவிருக்கும் பூஸா கைதிகள் முன் வைத்திருக்கும் நான்கு கோரிக்கைகளும் வருமாறு:-

தடுத்து வைக்கப்பட்டிருப் போரில்—

★ குற்றம் இழைக்காதோர் அனைவரும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்.

★ குற்றம் இழைத்தோர் எனக் கருதப்படுபவர்களுக்கு எதிராக—அத்தகைய குற்றச் செயல் தொடர்பான — வழக்கை உடன் தாக்கல்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வந்தாறு மூலையில் படையினர் சுற்றி வளைத்துத் தேடுதல்

### பல்கலைக் கழக மாணவரும் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 25
வந்தாறுமூலை பகுதி நேற்று முன்தினம் அதிகாலை 5 மணியளவில் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

வந்தாறுமூலை பல்கலைக் கழக விடுதிகளையும் அவற்றை அண்டிய பிரதேசங்களையுமே படையினர் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தினர்.

பல்கலைக் கழக மாணவர்கள், ஊழியர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையான பொதுமக்களைக் கைதுசெய்த படையினர் அவர்களை முகாமுக்குக் கொண்டு சென்றனர்.

கைது செய்யப்பட்டவர்கள் தீவிர விசாரணையின் பின் தலையாட்டிகளின் முன்னால் நிறுத்தப்பட்டனர்.

அவர்களில் மூவரைத் தவிர ஏனையோர் பின்னர் விடுவிக் கப்பட்டனர் என்று தெரிவிக் கப்பட்டது (இ 5)

## வாதுவவில் தபால்களை அனுப்ப முயற்சி

யாழ்ப்பாணம், மார்ச் 25
நாளை பருத்தித்துறையில் இருந்து புறப்படும் என எதிர் பார்க்கப்படும். 'வாதுவ' கப்பல் கொழும்புக்கு நேரடியாகச் செல்லுமானால் அதில் தபால் பொதிகளையும் எடுத்துச் செல்வதற்குரிய ஒழுங்குகளை வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் திரு. எஸ். எம். சேதுகாவலர் மேற்கொண்டுள்ளார்.

குறிப்பிட்டது போல் வாதுவ நாளை கொழும்பு புறப்படுமானால், அதில் தபால்களை எடுத்துச் செல்ல வசதியாக நாளை காலை 9.00 மணிக்கு முன்னதாக யாழ். பிரதம தபாலகத்தில் உள்ள தபால் பெட்டியில் கடிதங்களைச் [illegible]

## ராணுவப் பிடியில் சிக்கியுள்ள மக்கள் உளரீதியில் பாதிப்பு

### தீவகம், மற்றும் வலிகாமம் மேற்கு பகுதி நிலைகுறித்து பங்குத் தந்தை

யாழ்ப்பாணம், மார்ச் 25
தீவகம் மற்றும் வலிகாமம் மேற்குப் பகுதிகளில் இராணுவத்தின் பிடியில் சிக்கியுள்ள மக்கள் உள ரீதியாக பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். ஆயர் அதி. வண. தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளாருடன் மேற்படி பகுதிகளுக்கு நேரில் விஜயம் செய்துவிட்டு நேற்று யாழ். திரும்பிய பேராலய பங்குத்தந்தை அருட்திரு ஜெபநேசன் அடிகளார் இத் தகவலைத் தெரிவித்தார்.

புங்குடுதீவு, காரம்பன், நாரந்தனை, வேலணை சரவணை ஆகிய இடங்களில் சுமார் 300 வரையிலான மக்களே தங்கியுள்ளனர் என்றும் —

ஊர்காவற்றுறையில் மக்கள் எவரும் இல்லை என்றும் — இப்பகுதிகளில் உள்ள மக்கள் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் வருவதற்கு அவர்கள் விருப்பம் கொண்டுள்ளனர். சுகாதார நிலைமைகள் அங்கு மோசமாக உள்ளன என்றும் — அவர் தெரிவித்தார்;

இளவாலையில் பெண்கள் தங்கியுள்ள வீடுகளில் இரவு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சித்தாண்டியில் கைதானோர் குறித்து தகவல் எதுவுமில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 25
சித்தாண்டிப் பகுதியில் முகாமிட்டுள்ள இராணுவத்தினர் தேசவிரோதிகளுடன் இணைந்து அப்பகுதியில் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த 20 ஆம் திகதி அப் பகுதியில் உள்ள வீடுகளுக்குள் புகுந்த இராணுவத்தினர் அங்கிருந்து நான்கு பொதுமக்களை கைது செய்து கொண்டு சென்றதாகவும் ஆனால் பின்னர் அவர்களைக் கைது செய்யவில்லை என இராணுவம் மறுத்துவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கொம்மாதுறையில் உள்ள முகாமைச் சேர்ந்த இராணுவத்தினரும் அதே தினம் மாவடிவேம்பு என்னுமிடத்தில் இரு பொதுமக்களைக் கைது செய்துள்ளனர்.

இவ்விருவரைப் பற்றிய தகவல்களும் இதுவரை தெரியவரவில்லை எனக் கூறப்படுகிறது.

கடந்த 9 ஆம் திகதி இடம் பெற்ற மற்றொரு சம்பவத்தில் வயலில் வேலை செய்து கொண்டிருந்த 40 ஆம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார். இவரும் இதுவரை விடுவிக்கப் படவில்லை. (இ-5)

## ப.நே.கூ. சங்கங்கள் ஊடாக நெல், அரிசி, பால்மா: புலிகள் விநியோகிப்பர்

யாழ்ப்பாணம், மார்ச் 25
குடாநாட்டில் நெல், அரிசி மற்றும் ஒருவயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கான பால்மா என்பவற்றை நியாய விலையில் ப. நோ. கூ. சங்கங்கள் மூலம் வழங்க விடுதலைப் புலிகள் ஏற்பாடு செய்துள்ளனர்.

இது பற்றிய விவரங்கள் நாளை வெளியிடப்படும் என விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

[இ-5]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### மணப்பெண் தேவை

வயது 30, நட்சத்திரம் பரணி, 7இல் செவ்வாய் உள்ள அழகிய படப்பிடிப்பாளருக்கு 28 வயதுக்கு உட்பட்ட அழகிய மணமகள் தேவை. குறிப்புடன் உடன் தொடர்பு கொள்ளவும்: இல. 895. மே/பா உதயன் (6069)

### தேவை

குரக்கன், பலும்கொடியல் உடன் தேவை. தொடர்பு கொள்ளவும். "அ ன்ன பாம்", இணுவில். (சி-4717)

### இலவச திருமண சேவை

27 வயது, பூசம், செவ்வாய் 1, கனிவில் தொழில் புரிபவருக்கு மணப்பெண் தேவை. பெண்ணை அழைக்க ஆவன செய்யலாம். நேரடித் தொடர்பு: ஞாயிறு காலையில். விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. (24923)

## கூட்டணி பற்றி பா. ஜ. கட்சி

பாரதீய ஜனதா - அ. இ. மு. க. கூட்டணி பற்றி அடுத்த பொதுத் தேர்தலுக்கு முன்னர் அறிவிக்கப்படும்.

இவ்வாறு பாரதீய ஜனதாக் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. எஸ். கோவிந்தாச்சார்யா பெங்களூரில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இக் கூட்டணி பற்றி இப்போது சொல்லமுடியாது என்றும்போதுத் தேர்தல் சமயத்தில் அது முடிவாகும் என்றும் அவர் கூறினார். (ஐ-ன்)

உ

### மங்களகரமான
## ★ திறப்பு விழா ★
# அபிராமி மில்

இன்று 25 - 03 - 1993 பங்குனி 12 ஆம் நாள் வியாழன் காலை 9.26 மணி தொடக்கம் 10-38 மணி வரை வரும் சுபவேளையில்,

மங்களகரமாக திறந்து வைக்கப்படும் இத்திறப்பு விழா வைபவத்தில் அன்பர்கள், நண்பர்கள் அனைவரையும் வருகை தந்து சிறப்பிக்குமாறு அழைக்கின்றோம்.

**அபிராமி மில்,**
ஐயனார் கோயிலடி,
தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்.

(24945)

## இராஜினாமா அறிவித்தல்

இத்தால் சகலரும் அறிவதாவது 26-09-1991 முதல் 23-03-1993 வரையான காலப்பகுதியில் நாட்டிற்கும் மக்களுக்கும் குறிப்பாக கல்லூரி மாணவர்களின் நலன்களுக்கும் நல்ல பல சேவைகளை வழங்கிய எமது கல்லூரி அனைத்துத்துறை பகல்/பகுதி நேர மாணவர்களை உள்ளடக்கிய யாழ். தொழில் நுட்பக் கல்லூரி "மாணவர் அவை" செயற்குழு, திட்டமிடற் குழு உள்ளடங்கிய அனைத்து நிர்வாக உறுப்பினர்களும் மனமொருமித்து இராஜினாமா செய்து தமது சேவைகளை முடித்து வைக்கிறார்கள் என அறியத் தருகிறோம்.

என்றும் நன்றியுடன்:
" மாணவர் அவை ",
தலைவர்: சி. சிவகரன்.

தொழில் நுட்பக் கல்லூரி,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் [24947]

## மாண்புறும் மகர யாழ்

நீதி உயர்ந்த மதி கல்வி — அன்பு
நிறைய உடைய மேலோன்
ஏழைகளின் உயிர் காக்கும் ஏந்தல்
எம் மண்ணின் மைந்தன்

டாக்டர்
**ச. சிவகுமாரன் அவர்கள்**

மகர யாழ் விருது பெறுவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகிறோம்

மகர யாழ் மாண்பு பெறுகிறது
பல்லாண்டு வாழ்க
தக்கோரை இனம் காணும் பணிக்காக

**கம்பன் கழகத்திற்கு**
எமது
**பாராட்டுக்கள்!**

ஆறுமுகம் சிற்பாலயம்.
ஹரன் ரெக்ஸ்ரைல்,
திருநெல்வேலி.
அகில இலங்கை விஸ்வ கர்மகுல சங்கம்

(சி-4580)

## போலி நோட்டு விவகாரம்; தேடப்பட்டவர் சரண்!

கொழும்பு, மார்ச் 25 போலி கரன்ஸி நோட்டு விவகாரம் தொடர்பாக இரகசியப் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த நபர் கடந்த வெள்ளிக்கிழமை சரணடைந்தார்.

கல்கிசை நீதிவான் சந்தேக நபரை நாளை 26 ஆம் திகதி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மஹாபொல புலமைபரிசில் வைபவம்-1993

20 - 03 - 1993 அன்று பத்திரிகைகளில் வந்த விளம்பரம் தொடர்பாக, இவ்வைபவத்தில் பங்குபற்ற உரித்துடைய மாணவர்கள் அனைவரையும் 1993-03-26 வெள்ளிக்கிழமை பி. ப. 1.00 மணிக்கு தத்தமது அடையாள அட்டையுடன் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக் கைலாசபதி கலை அரங்கில் சமூகம் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

வைபவத்திற்கான அழைப்பிதழ் கிடைக்கப் பெற்ற மாணவர்கள் அல்லாத ஏனையோர் 93 - 03 - 27 அன்று வைபவத்திற்கு வரும்போது அழைப்பிதழை தம்முடன் எடுத்து வரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

கா. மாணிக்கவாசகர்
அரசாங்க அதிபரும்,
மாவட்ட ஆணையாளரும்.

24 - 03 - 1993 (சி/4581)

சாவகச்சேரி
### ப. நோ. கூ. சங்கம், சாவகச்சேரி
## உள்துறை கணக்காய்வாளர் (Internal Auditer)
## பதவிக்கான விண்ணப்பம் கோரல் 105:9

சம்பள அளவுத் திட்டம்: 905 — 1605 / 40 x 5 — 50 x 5

(அத்துடன் வேலையாளர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட படிகளும்)

மேற்படி பதவிக்கு கீழ்வரும் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் சொந்தக் கையெழுத்தில் பூர்த்தி செய்து தலைவர், சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம், சாவகச்சேரி என்ற விலாசத்திற்கு 10-04-1993 ற்கு முன் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ சமர்ப்பித்து உறுதிப்படுத்தவும். மேலதிக விபரங்கள் தேவைப்படின் சங்க காரியாலயத்தில் பார்வையிடலாம்.

கல்வித் தகைமை:

(I) கூட்டுறவுப் பணியாளர் 10ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்குப் பதிவாளர்/கணக்கியல் அல்லது கணக்காய்வு இலிகிதர் பதவியில் இரண்டு வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 11ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்கியல் / கணக்காய்வு இலிகிதர் பதவியில் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

(II) ஐக்கிய இராஜ்ஜியத்தில் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் ஸ்தாபனமொன்றின் கணக்கியல் / கணக்காய்வு துறையிலான பதவியில் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

(III) கூட்டுறவுப் பணியாளர் (உயர்தரம்) பத்திரம் / க. பொ. த. (உயர்தரம்) ல் கணக்கியல் ஒரு பாடமாகக் கொண்ட மூன்று பாடங்களிலான சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்கியல் / கணக்காய்வு துறையிலான பதவியில் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்

2. வயது: 23 — 40

3. நிபந்தனைகள்:

(அ) விண்ணப்பதாரர் 2 வருடங்களுக்கு மேல் யாழ். மாவட்டத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(இ) ஆங்கிலம் எழுத, வாசிக்கத் தெரிந்திருத்தல் வேண்டும்.

(ஈ) சங்கத்தால் நிர்ணயிக்கப்படும் பிணைப் பணம் செலுத்தத் தயாராக இருத்தல் வேண்டும்.

(உ) தெரிவு செய்யப்படுபவர் தொடர்ந்து மூன்று வருட காலத்தில் கடமை புரிவதற்கான உறுதிப்பத்திரத்தில் கையொப்பமிடல் வேண்டும்.

(ஊ) விண்ணப்பப் படிவத்துடன் கல்விச் சான்றிதழ், அனுபவச் சான்றிதழ், வதிவிட அத்தாட்சிப் பத்திரம், பிறப்புச் சான்றிதழ், அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதி இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

தலைவர்,
சாவகச்சேரி, ப. நோ. கூ. சங்கம்,
சாவகச்சேரி.

23-03-1993. [சி-4575]

## அரசாங்க அறிவித்தல்

### சுகாதார சேவைகள் திணைக்களம் யாழ்ப்பாணம்
### துணை வைத்தியசேவை மற்றும் நடுத்தர தொழில்நுட்பவியலாளர் சேவைகளுக்கான பயிலுநர்கள் தெரிவு—யாழ்ப்பாண மாவட்டம்

1992ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் மேற்படி சேவைகளுக்கான பயிலுநர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை கீழ்க் குறிப்பிடப்படும் பரீட்சார்த்திகளுக்கு 1993ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி, வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் பணிமனையில் நடத்தப்படும்.

| | பெயர் | விலாசம் |
|---|---|---|
| 01. | திரு. ஆர். ஜெயக்குமார் | 'லீலா வாசம்' தவளயாடி ஒழுங்கை, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம். |
| 02. | செல்வி என். சஜீதா | சேர்ச் ஒழுங்கை, உடுவில், சுன்னாகம். |
| 03. | செல்வி கே. [illegible] | 50, சப்பெல் வீதி, யாழ்ப்பாணம். |
| 04. | திரு. வி. சிவகுமார் | தெனியாவத்தை, புலோலி மேற்கு, பருத்தித்துறை. |
| 05. | செல்வி எஸ். சுஜாதா | விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம். |
| 06. | திரு. பி. அரவிந்தன் | சிவபுரி, உசன், மிருசுவில். |
| 07. | திரு எல். எக்ஸ். சி. ரஞ்சன் | கண்டி வீதி, மிருசுவில். |
| 08. | திரு. எஸ். ஜெயநாதன் | பிராமணன் தோட்டம, கரவெட்டி மேற்கு, கரவெட்டி. |
| 09. | செல்வி எஸ். ஜெயந்தனி | அமுதாராமி, கச்சாய் வீதி, சாவகச்சேரி. |
| 10. | செல்வி கே. தேன்மொழி | 'தேவி வாசா', வசாவிளான் மேற்கு, கன்னாகம். |
| 11. | திரு. ரி. இராஜரஞ்சன் | அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி. |
| 12. | திரு. என். சூரியகுமாரன் | 79, அரசடி வீதி, யாழ்ப்பாணம். |
| ★13. | செல்வி ஆர். உமையாள் | வடலியடைப்பு, பண்டத்தரிப்பு. |
| 14. | திரு. என். தனபாலசிங்கம் | உசன், மிருசுவில். |
| 15. | திரு. கே. ஆறுமுகநாதன் | அல்லாரை வடக்கு, கொடிகாமம். |
| 16. | செல்வி எம். சுதர்சினி | இணுவில் மேற்கு, சுன்னாகம். |
| 17. | செல்வி ஆர். நடனமலர் | நியூ விமாகி, 27/3, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். |
| 18. | செல்வி பி. குந்தவி | 84/1, அரசடி வீதி, யாழ்ப்பாணம். |
| 19. | திரு. ரி. சர்வானந்தன் | 445, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். |
| 20. | செல்வி வி. ஜெகதாம்பிகை | "ஆனந்தா கொட்", கதிரவேற்பிள்ளை பருத்தித்துறை. |

2. நேர்முகப் பரீட்சைக்கான மேற்குறித்த சகல பரீட்சார்த்திகளுக்கும் தனித்தனியே கடிதங்கள் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளன. எனினும் ★ அடையாளமிட்டவர்களின் கடிதங்கள் இப்பணிமனையில் வைக்கப்பட்டுள்ளன. அவர்கள் வேலை நாள் ஒன்றில் காலை 8-30 மணி தொடக்கம் பிற்பகல் 4-15 வரை நேரில் வந்து தமது கடிதங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

3. நேர்முகப் பரீட்சைக்கான கடிதத்தின் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஆவணங்களின் மூலப்பிரதிகளுடன் ஒவ்வொன்றினதும் ஒளிப்படப் பிரதியொன்றினையும் கொண்டுவருமாறு சகல பரீட்சார்த்திகளும் கேட்கப்படுகின்றனர்.

4. மேற்படி பயிலுநர்களைத் தெரிவு செய்வதற்காக 1993 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் திகதி இப்பணிமனையில் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்க முடியாமல் போன பரீட்சார்த்திகளும் 02-04-1993 ஆம் திகதி நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கலாம் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

நன்றி:

பொ. இரத்தினசபாபதி,
பிராந்திய பணிப்பாளர்.

(சி/4574)

உ

## சிவாச்சாரிய அபிஷேக அழைப்பு

நிகழும் ஆங்கிரஸ வருடம் பங்குனி மாதம் 13 ஆம் நாள் (26 03-1993) வெள்ளிக்கிழமை காலை 6 மணி 30 நிமிடத்தில் வரும் மீனலக்ன சுபமுகூர்த்தத்தில்,

அரியாலை ஸ்ரீ ஞான பைரவர் கோவில்
முன்னாள் பிரதமகுரு
அமரர் சிவஸ்ரீ கு. பாலசுப்பிரமணியக் குருக்கள்
அவர்களின் புதல்வர்

**பிரம்மஸ்ரீ பா.ரவீந்திர சர்மாவிற்கு**
சிவாச்சாரிய அபிஷேகம்

அரியாலை ஸ்ரீ ஞான பைரவர் ஆலயத்தில்

சிவஸ்ரீ ஸ்கந்தராம்பசிவக் குருக்கள் அவர்களின் தலைமையில்

சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள் அவர்களால் நிறைவேற்றி வைக்கப்படும்

உறவினர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவரையும் பங்குகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்:
தங்கள் நல்வரவை நாடும்,
**திருமதி பா. நாகேஸ்வரி குடும்பத்தினர்.**

இல. 263, ஸ்ரீஞான பைரவர் கோவில்,
ஆ. வ. றோட்,
அரியாலை,
யாழ்ப்பாணம். (24981)

## தேறாத ஓராண்டு



மலர்வு: 29 — 08 — 1953

உதிர்வு: 25 — 03 — 1992

**திருமதி மகேஸ்வரி சந்திரபாலன்**
(ரஞ்சி)
25 - 03 - 1993

எங்கள் இதயங்கள் இருக்குமட்டும் நீ எம்முடன் இணைந்திருப்பாய். எமது கண்ணீர் அஞ்சலிகள் ஆயிரம்!

பெற்றோர், துணைவன், பிள்ளைகள்,
அக்கா, அண்ணா, தம்பிமார்,
குடும்பத்தினர்.

செம்பியன் லேன்,
கொக்குவில். (24682)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## காமினியின் தடி!

சிங்களப் பேரினவாதமும், இனவெறியும் தெற்கில் மீண்டும் தூண்டப்பட்டு வருகின்றன. இந்தக் கைங்கரியத்தைச் செய்வதற்கு அங்கு காலத்திற்குக் காலம் ஒவ்வொரு ''அவதார புருஷர்கள்'' உருவாகிக் கொள்வது வழக்கமாகிவிட்டது.

1950ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்த இனவாதத் தலைவர்கள் வரிசையில் எல். ஆர். ஜெயசூரிய, கே. எம். பி. இராஜரத்தின, சிறில் மத்யூ, நெவில் பெர்னாண்டோ, கலில் ரஞ்சன் ஜெயக்கொடி, புஞ்சி நிலமே போன்றவர்கள் தமது ''முத்திரையை'' பதித்துக்கொண்டார்கள். இப்போது அந்த இடத்தை வகித்து வருபவர் ஜே. ஆர். அரசாங்கத்தில் சுகாதார அமைச்சராக இருந்த காமினி ஜெயசூரிய.

தனது இனவாதத் திட்டங்களுக்கும் பலமூட்டவும் அதன் மூலம் சிங்கள பௌத்த பெருந்தலைவராகக் காலூன்றிக் கொள்ளவும், சிங்களவர் பாதுகாப்புச் சபையையும் (சிங்கள ஆரக்ஷ சபா) அவர் தோற்றுவித்திருக்கிறார்.

சிங்கள-பௌத்த தீவிரவாதத்தை விதைப்பவர்கள், அதனை வைத்துத் தலைவர்களாக உருவாக்க நினைத்தவர்கள் நீண்டு நிலைத்ததில்லை. சில காலம் ஓர் அலையாக உயர்ந்து எழுவதுமுண்டு. ஆனால் குறுகிய கால இடைவெளியில் கரைந்து கண்ணுக்குத் தெரியாமல் மங்கி மறைந்து விடுவதுமுண்டு. இவ்வாறான பலரும் தங்களது சொந்த வாழ்க்கையில் உள்ள சில குறைகளை, தாழ்வு மனநிலைகளை நிவர்த்திச் செய்யவும் மறைத்துக்கொள்ளவுமே இனவாதத்தை உச்சாடனம் செய்கிறார்கள் என்பது பின்னர் தெரியவருவதுண்டு.

1970களின் பின்னர் பெரும் தமிழர் விரோதியாகவும், இனத்துவேஷியாகவும் விளங்கிய சிறில் மத்யூ, தனது தனிப்பட்ட வாழ்க்கையில் தமிழரோடு நட்புறவாகப் பழகியவர் என்றும், சிங்களவர் மத்தியில் குறைந்த குலத்தினராகக் கருதப்படுவதை உயர்த்தி ஈடுசெய்யவே இனவாதத்தை முன்னெடுத்தார் என்றும் இப்போது தகவல்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன.

அரசாங்கம் யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் மீது பொருளாதார, போக்குவரத்துத் தடைகளை விதித்து அவர்களைப் பட்டினி போட்டுச் சாகடிக்க முயல்கிறது. இராணுவ நடவடிக்கைகள் மூலம், புலிகளைக் கொல்வதாகக் கூறிக்கொண்டு, தமிழர்களை இன ஒழிப்பு — இனத் துடைப்பு — செய்துவருகிறது. அதற்கு மேலதிகமாகவே தடைகளைப் போட்டு மேலும் தமிழர்களை ஆயுதச் செலவின்றிக் கொல்ல முயல்கிறது.

இந்தகைய சூழ்நிலையில் ஐ. நா. ஸ்தாபனத்தின் அங்க அமைப்பான அகதிகளுக்கான தூதரகம் மனித நேயத்தின்பாற்பட்டு, மனிதாபிமானத்துடன் குடாநாட்டுக்கான ஒரு போக்குவரத்துப் பாதையைத் திறப்பதனையும் தடுப்பதற்கு விஷமத்தனமான கருத்தை திரு. ஜெயசூரிய முன் வைத்திருக்கிறார்.

மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது போல, பூநகரிப் பாதையைத் திறப்பது புலிகளைச் சாந்தப்படுத்தவா என்று நச்சுத்தனமாகக் கேட்கிறார். படையினரின் போருபாயங்களை பாதிக்காமல் இருக்க வேண்டும் என்பதற்கு அழுத்தம் கொடுக்கிறார். யாழ். குடாநாட்டு மக்களுக்கு உணவுப் பொருள்கள் கிடைக்கச்செய்யும் ஒரு சர்வதேச ஸ்தாபனத்தின் முயற்சியை முறியடிக்கக் குழி பறிக்கிறார். வேண்டாத கற்பனைகளைக் கருத்துக்களாக்கி பூநகரிப் பாதை விவகாரத்தை தெல் திரண்டுவரும் வேளை தாழியை உடைக்கத் தடி எடுக்கிறார்! இனவெறியில் இது ஒரு ரகமா?

பாதுகாப்பு எல்லைகளை விஸ்தரிக்க

# ஆனையிறவு, மாதகல் பகுதிகளில் விரைவில் ராணுவ நடவடிக்கை

## துருப்புக்கள் குவிப்பாம்

கொழும்பு, மார்ச் 25

ஆனையிறவு, மாதகல் இராணுவ முகாம்களின் பாதுகாப்பு எல்லைகளை விஸ்தரிக்கு முகமாக பாரிய இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள இந்த இராணுவ நடவடிக்கைக்காக மேலதிக துருப்புகள் விமான மூலம் வடபகுதியில் குவிக்கப்பட்டு வருவதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. (ஒ-ள)

மூன்றரை மடங்கால்

# ஆதனவரி அதிகரிப்பு: வரியிறுப்பாளர் கண்டனம்

யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ் மாநகரசபை 1993 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் புதிய ஆதன வரி திட்டத்திற்கு அமைவாக முன்னரிலும் பார்க்க மூன்றரை மடங்கு அதிகமான ஆதன வரியை நகர மக்கள் மீது சுமத்தியுள்ளது.

இவ்வாறு கடந்த 23 ஆம் திகதி நடைபெற்ற யாழ்மாநகர சபை வரியிறுப்பாளர் சங்க கூட்டத்தில் சங்க நடவடிக்கைக் குழுவின் ஏனோபித்த தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அன்றைய கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

★ இன்றைய போர்க்கால சூழ்நிலையில் ஸ்ரீலங்கா அரசின் பொருளாதாரத் தடையினால் உணவு, உடை, உறைவிடம், சுகாதாரம், போக்குவரத்து போன்றவற்றிற்கான பாதிப்புகளை தேதிடையாகச் சந்தித்தும் இந்த மண்ணையே நம்பி வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கு இந்த அதிகரித்த வரி விதிப்பு மனித நேயமற்ற செயலாகும்.

★ மாநகர சபையில் மக்கள் பிரதிநிதிகள் இல்லாத வேளையில் அரசினால் நியமிக்கப்பட்ட ஆணையாளர், மாநகர சபை மூலம் மக்களுக்கு அன்றாடம் அளிக்க வேண்டிய அடிப்படைத் தேவைகளான குடிதண்ணீர், மின்சாரம், சுகாதாரம், சூழல் பராமரிப்பு, வீதி திருத்தம் போன்றவற்றை முற்று முழுதாக நிறைவேற்றாமல் அதற்கு மாறாக இன்றைய சூழலில் அரசின் ஆணைப்படி வரி அதிகரிப்பை மக்கள் மீது சுமத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

★ மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட மாநகரசபையாக இல்லாததினால் மக்களின் நலனைக் கவனிக்க முடியாத நிலையிலும், மக்கள் சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள நீதிமன்றங்கள் இல்லாத வேளையில் மக்கள் நீதியையும், நிறைவையும் தங்களிடமே வேண்டி நிற்கின்றார்கள். (ஒ-162)

ஆதனவரி அதிகரிப்பு:

# வரியிறுப்பாளர் நிலை பற்றி பரிசீலனை செய்யப்படும்

## ஆணையாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 25

புதிய வரி குறித்து ஆட்சேபம் தெரிவிக்கும் வரியிறுப்பாளர்கள் நேரில் அழைக்கப்பட்டு அரசாங்க விலைமதிப்பீட்டாளர் சமூகத்தில் அவர்களின் வரி நிலை குறித்து பரிசீலனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆதன வரியின் நியாயமற்ற அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதாக வரியிறுப்பாளர்கள் முறைப்பாடு செய்துள்ளதை அடுத்து யாழ். மாநகர சபை ஆணையாளர் சம்பந்தப்பட்டவர்களுக்கு மேற்கண்டவாறு அறிவித்துள்ளார்.

ஆணையாளர் வரியிறுப்பாளர்களுக்கு அனுப்பியுள்ள அறிவித்தலில் —

தாங்கள் 31-03-93க்கு முன்னதாக இவ்வருடத்துக்குரிய வரியை முழுமையாகச் செலுத்துவதன் மூலம் தங்களுக்குக் கிடைக்கக்கூடிய 10 வீத வரிக்கழிவினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு வசதியாக ஏற்கனவே தங்களுக்கு வழங்கப்பட்ட ஆதனவரி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருக்கும் தொகையைச் செலுத்தி உரிய சலுகையைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

இவ்வாறு நீங்கள் கொடுப்பனவு செய்வது உங்கள் வரிக் குறைப்பு விண்ணப்பத்தினை எவ்விதத்திலும் பாதிக்காது. விசாரணையின் பின் வரி குறைக்கப்படும் பட்சத்தில் அதற்கேற்றவாறு கணக்குகள் சரிசெய்யப்பட்டு, மேலதிகமாகச் செலுத்திய தொகை அடுத்த காலப்பகுதிக்கு வரவு வைக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் — என்று குறிப்பிட்டுள்ளார். (ஒ-162)

# யாழ். பஸ் நிலையம் இருளில்! பயணிகள் தடுமாற்றம்!!

யாழ். நகர பஸ் நிலையம் இருளில் மூழ்கிக் கிடப்பதால் நள்ளிரவுக்குப் பின்னர் இனாலியில் இருந்து வரும் பயணிகள் சொல்லொணா கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

எத்தனையோ சிரமங்களுக்கு மத்தியில் யாழ். நகரை வந்தடையும் மக்கள், காரிருளில் தடுமாற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கொழும்பு மற்றும் தூர இடங்களில் இருந்து வருபவர்கள் தமது பெறுமதி வாய்ந்த பொருள்கள் அடங்கிய 'பாக்'குகளை அங்கு தவறவிட்டு விடுகின்றனர், அல்லது அவை கைமாறிச் சென்று விடுகின்றன. பைகளை அபகரிக்கும் சம்பவங்கள் நடக்கவும் வாய்ப்புக்கள் உண்டு.

பயணிகள் அனுபவிக்கும் இந்த அவலத்தை மாநகர சபையினர் போக்குவரத்து சபையினர் என்று இதுவரை பாதிக்கப்பட்டவர்கள் கேள்வி எழுப்புகின்றனர். (ஒ-15)

கலைக்கப்பட்ட மாகாண சபையின்

# முதல்வர்கள், உறுப்பினர் ஆயுதங்களை வைத்திருப்பர்!

கொழும்பு, மார்ச் 25

கலைக்கப்பட்ட மாகாண சபைகளின் முதலமைச்சர்களும் ஏனைய உறுப்பினர்களும் தங்களுக்கு வழங்கப்பட்ட துப்பாக்கிகளை தொடர்ந்தும் வைத்திருப்பார்கள்.

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல்களில் அவர்களில் பெரும்பாலோர் மீண்டும் போட்டியிட விரும்புவதால், அவர்களின் சொந்த பாதுகாப்புக்கு ஆயுதங்கள் தேவைப்படுகின்றன என்று மேல்மாகாண ஆளுநர் எஸ். சர்வானந்தா தெரிவித்தார்.

இதேவேளை —

ஏழு மாகாண சபைகளின் முன்னாள் முதலமைச்சர்களும் தங்களுக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனங்களை அரசாங்கத்திடம் திருப்பி ஒப்படைத்து விட்டனர் [illegible] (ஒ-[illegible])

## உலர் உணவு விநியோகம்

தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கத்தினர் பெப்ரவரி மாத இறுதி இரண்டு வாரங்களுக்கான 118ஆம், 119ஆம் கட்ட இலவச உலர் உணவு விநியோகத்தை தற்சமயம் ஆரம்பித்துள்ளனர். (ஒ-162)

## அகதி மாணவருக்கு அன்பளிப்புப் பொதி!

இடம்பெயர்ந்து முகாம்களில் உள்ள பாடசாலை சிறார்களுக்கு தென்னிந்திய திருச்சபையினர் திறமை அடிப்படையில் சுமார் இரண்டாயிரம் ரூபா பெறுமதியுள்ள அன்பளிப்புப் பொதிகளை வழங்கி வருகின்றனர்.

யாழ். மாவட்டத்திலுள்ள சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளையும் உள்ளடக்கிய வகையில் சுமார் 500 பொதிகள்—

அந்தந்தப் பகுதி முகாம்களின் பராமரிப்பில் ஈடுபடும் அரசசார்பற்ற நிறுவனங்களின் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றன. (ஒ-162-15)

## நாடாளுமன்ற புதிய கூட்ட தொடர் ஏப் 22இல்

நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத் தொடர் அடுத்த மாதம் 22 ஆம் திகதி முற்பகல் 10 - 15 மணிக்கு அங்கு ஆரம்பமாகும் செய்யப்படவிருக்கிறது.

இத்தகவலை நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் நேற்று அறிவித்தார்.

நாடாளுமன்றத்தின் தற்போதைய கூட்டத் தொடர் நேற்று முன்தினம் நள்ளிரவுடன் கலைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

## திருத்தல பாதயாத்திரை

இன்றைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு இருநெறிய திருமுறைச் செல்வம் ஏற்பாட்டில் மாதாந்தம் நடைபெறும் திருத்தலப் பதிநடை (பாதயாத்திரை) இன்று வியாழன் உடுவில் உதவி அரச அதிபர் பிரிவில் நடைபெறும்.

தவத்திரு சண்முகவடிவேல் சுவாமிகள் தலைமையில் சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோவிலில் இருந்து பாதயாத்திரை இன்று காலை 7 மணிக்கு ஆரம்பமாகும்.

## ஆலயங்களில்

சுன்னாகம் தாளையடி ஸ்ரீ ஆரீகரபுத்திர ஐயனார் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. (க 89)

o o o

அளவெட்டி வடக்கு சந்திபுரம் வேல்முருகன் ஆலய மஹா கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை நடைபெறும். (க)

o o o

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி கோவில் கும்பாபிஷேக தினவிழா இன்று வியாழக்கிழமை காலை 10 மணி முதல் நடைபெறும். பகல் 12 மணிக்கு அன்னதானம் இடம்பெறும் (க)

o o o

உரும்பராய் வடக்கு பராசக்தி அம்பாள் ஆலயத்தின் நூதனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை நடைபெறும் (க-154)

o o o

தென்மராட்சி, மார்ச் 25

நுணாவில் கிழக்கு எற்குழி கந்தசாமி கோவிலில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட எழுந்தருளி விநாயகர் ஆலய கும்பாபிஷேகம் நாளை வெள்ளி காலை நடைபெறும். கும்பாபிஷேகக் கிரியைகள் இன்று வியாழன் காலை ஆரம்பமாகும். (இ-117)

o o o

யாழ்ப்பாணம், மார்ச் 25

வட்டுக்கோட்டை இலுப்பையடி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான அலங்கார உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும். இறுதி நாளான பங்குனி உத்தரத் தன்று அம்பாளுக்கு நவசக்தி அர்ச்சனையும், அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கும் வைபவமும் நடைபெறும்.

o o o

யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ். நீராவியடி தோப்பு ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் கோயிலின் வருடாந்த அலங்காரத் திருவிழா நாளை வெள்ளி மாலை 3.30 மணிக்கு ஆரம்பமாகும்.

தொடர்ந்து 0 தினங்கள் நடைபெற்று 11ஆம் நாள் சங்காபிஷேகமும் இடம்பெறவுள்ளது. (இ-162)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின அரையிறுதியாட்டங்கள் இன்று மாலை அரியாலை மத்திய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ பிற்பகல் 3.30 மணி:- குருநகர் பாடும்மீன் வி. க. அணி எதிர் அரியாலை வி. க. அணி

★ மாலை 4.30 மணி:- சென். ஹென்றிஸ் வி. க. அணி எதிர் சென். நிக்கிலஸ் வி. க. அணி (உ-17)

o o o

யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ். கல்வித் திணைக்களம் நல்லூர் கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தி வரும் கரப்பந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு யாழ் சென்ஜோன்ஸ் கல்லூரி ஆடுகளத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது (உ-17

o o o

மக்கள் வங்கி அணிக்கும் வ. பி. போ. ச. அணிக்கும் இடையிலான சிநேகபூர்வ கிரிக்கெட் ஆட்டம் இன்று காலை 9 மணிக்கு கோண்டாவில் கலைவாணி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. [உ]

## இன்று

அறவழிப் போராட்டக்குழு நடத்தும் இடம்பெயர்ந்தோர் சுயசார்புப் பயிற்சித் தொழிலகத்தின் ஆரம்பவிழா இன்று வியாழக்கிழமை காலை 10-30 மணிக்கு நாவற்குழி ''எழுச்சி'' கட்டடத்தில் நடைபெறும். (க)

★ ★ ★

இந்து மதகுருமார் ஒன்றியத்தின் வடமராட்சிக் கோட்டத்தால் புதிய சமஸ்கிருத பாடசாலை ஒன்று இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு புலோலி பசுபதீஸ்வரர் ஆலய பார்வதி வர்த்தனி கலாமண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்படும். (க-155)

★ ★ ★

நல்லூர் செல்லப்பா சுவாமிகளின் 78ஆவது ஆண்டு குருபூசை இன்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு அவரது நினைவாலயத்தில் நடைபெறும். (க-111)

## நாளை

மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சூழலும் சுகாதாரமும் பற்றிய கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது. (க-68)

o o o

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

அதிபர்கள் கடந்த ஜனவரி, பெப்ரவரி மாதங்களுக்குரிய உணவு முத்திரைக் கணக்கு விவரங்களையும் கொண்டு வருமாறு பண்டத்தரிப்புக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் அதிபர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார். (ஒ)

## திருமலை பத்ரகாளி கொடியேற்றம்

திருகோணமலை ஸ்ரீ பத்ரகாளி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

ஏப்பிரல் 4 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், அடுத்த நாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (உ)

## பாடசாலைகளில்

உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலையின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் நடைபெறும். (க-154)

o o o

தென்மராட்சி, மார்ச் 25

மட்டுவில் வடக்கு சாந்தநாயகி வித்தியாலய இல்ல மெய்வல்லுநர்போட்டி நாளை வெள்ளிக்கிழமை வித்தியாலய மைதானத்தில் அதிபர் வே. சண்முகநாதன் தலைமையில் நடைபெறும். [இ 117]

o o o

தென்மராட்சி, மார்ச் 25

தனங்கிளப்பு மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் க. ஞானவிம்பம் தலைமையில் நடைபெறும். [இ-117]

o o o

தென்மராட்சி, மார்ச் 25

நாவற்குழி மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை வெள்ளி பிற்பகல் 2.00 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் பி. முத்துலிங்கம் தலைமையில் நடைபெறும் [இ-117]

o o o

மயிலணி, மார்ச் 25

காங்கேசன்துறை நடேஸ்வரா கல்லூரி இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெறும். [க-89]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடாநாட்டில்

## நெருப்புக் காய்ச்சல் மருந்துக்குத் தட்டுப்பாடு

குடாநாட்டில் நெருப்புக் காய்ச்சல் பரவி வருவதை அடுத்து, இதற்குத் தேவையான மருந்து வில்லைகளை கொழும்பிலிருந்து அவசரமாக தருவிக்கும் முயற்சியில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஈடுபட்டுள்ளார்.

இந்த மருந்து வில்லைகளை கொழும்பில் இருந்து எடுப்பிப்பதற்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு, சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஆகியவற்றின் உதவி கோரப்படுகிறது.

குடாநாட்டிலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் இந்த மருந்து வில்லைகளுக்கு தற்போது தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-162)

இன்று 25 - 03 - 93 காலை 6-15 — 6-47 மணி வரையுள்ள சுபவேளையில்

### புதுக்கடைத் திறப்பு விழா

★ மணிலிங்கம்ஸ் ★

இல. 6, புதிய சந்திர மார்க்கட், யாழ்ப்பாணம்.

நண்பர்கள் மற்றும் அனைவரும் வருகைதந்து மகிழ்விக்குமாறு வேண்டுகின்றேன்.

இல. 74, கண்ணபுரம், கொட்டடி, யாழ்.

கா. பஞ்சலிங்கம் (24950)

### ஒரு நாள் ஞான ஒடுக்கம்

கத்தோலிக்க ஆசிரியர்களுக்கு

இடம்: யாழ். மறைக்கல்வி நடுநிலையம்

காலம்: 27 - 03 - 93 சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு

ஆசிரியர் திரு. ம. யேசுதாசன்
செயலாளர்

மறைக் கல்வி நடுநிலையம்,
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம். (24948)

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் இளையதம்பி (மருதப்பு)

(ஓய்வுபெற்ற புகையிரத கட்டிட மேற்பார்வையாளர்)

ஆறுமுகம் இளையதம்பி 23-03-93 செவ்வாய்க்கிழமை 12 மணியளவில் காலமாகி விட்டார்.

அன்னார் புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் 73/A, பலாலி வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகக் கொண்டவரும், செல்லமுத்துவின் அன்புக் கணவரும், மகாலக்ஷ்மி, அம்பிகாவதி, மங்கையர்க்கரசி (கனடா), சறோஜா (லண்டன்), கமலாதேவி (தென்னாபிரிக்கா), விமலாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், கதிர்காமநாதன் (மட்பாண்டக் கூட்டுத்தாபனம்), காலஞ்சென்ற நமசிவாயம் (B. A. - லண்டன்), Dr. விமலேந்திரன் (கனடா), சுந்தரமூர்த்தி (கணக்காளர் - லண்டன்), Dr. நவரட்ணராசா (தென்னாபிரிக்கா), கணேசலிங்கம் (புனருத்தாரண வைத்தியசாலை, நாகமம்), சிவசுப்பிரமணியம் (ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், மோகன், ராஜன், சரவணபவன், கோமதி, ஜனார்த்தன், சுதாகரன், சுதர்சன், சுரேந்திரன், சுசிதரன், வானதி, பிரசாந்தினி, சஜந்தி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற கனகரத்தினம், சின்னத்துரை (வர்த்தகர், நீர்கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனரும், இராசையா, அன்னமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

தகனக்கிரியைகள் 24-3-93 புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
மனைவி, பிள்ளைகள்

73/A, பலாலி வீதி,
கந்தர்மடம். (24949)

### கந்தையா வல்லியம்மை

வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா வல்லியம்மை 23-03-1993 இல் காலமானார்.

இவர் அப்புக்குட்டி செல்லாச்சியின் மகளும், வைத்திலிங்கம் கந்தையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வேலாயுதம், கோடீஸ்வரன் (சிமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சகுந்தலாவின் அன்பு மாமியும், லிங்கேஸ்வரன், நிவேஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 24-03-1993 அன்று நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கோடீஸ்வரன் (மகன்).

சலூன் ஒழுங்கை,
இணுவில். [5857]

### கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச். 25

யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர் அணிக்கும் சென்பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவர் அணிக்குமிடையிலான கூடைப்பந்தாட்டப் போட்டி யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இன்று வியாழன் பிற்பகல் 4-30 மணிக்கு நடைபெறும். (இ 20)

### சிரமதானம்

யாழ்ப்பாணம், மார்ச் 25

அரியாலை சித்துப்பாத்தி மயானத்தில் இன்று வியாழன் காலை 8 மணி தொடக்கம் சிரமதான வேலைகள் இடம்பெற உள்ளன. அரியாலை ஐக்கிய கழகம் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. [இ-17]

### மகாபொல பரிசில் பெற்ற மாணவர்

யாழ்ப்பாணம், மார்ச் 25

மகாப்பொல பரிசில் பெறத் தகுதி பெற்றுள்ள யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பல்கலைக் கழக மாணவர்களை, நாளை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ். கைலாசபதி கலையரங்கில் தம்மைச் சந்திக்குமாறு யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல் கோரி உள்ளார்.

பல்கலைக் கழக அடையாள அட்டை அல்லது தேசிய அடையாள அட்டையை தம்முடன் எடுத்து வரும்படியும் மாணவர்கள் கோரப்பட்டுள்ளனர். (இ-5)

### விஞ்ஞான தொழில்நுட்ப கண்காட்சி

விஞ்ஞான தொழில் நுட்ப கண்காட்சி ஒன்று யாழ் மத்திய கல்லூரியில் நடைபெற்று வருகிறது.

நேற்று ஆரம்பமான இக் கண்காட்சி நாளை வெள்ளி வரை நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-5)

### சம்பளம் வழங்க கட்டுநிதி இல்லை

யாழ். சுகாதார திணைக்கள ஊழியர்களுக்கு இம் மாதச் சம்பளம் வழங்குவதற்கு கட்டு நிதி இதுவரை வந்து சேரவில்லை.

இதனால் குறிப்பிட்ட திகதியில் இவர்களுக்கு சம்பளம் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (இ-135)

### ஒப்படைக்க கோரிக்கை

புதுடில்லி, மார்ச் 25

பம்பாய்க் குண்டு வெடிப்பின் சூத்திரதாரிகளெனக் கருதப்படும் மேமன் குடும்பத்தைச் சேர்ந்த ஆறுபேரை இந்தியாவிடம் ஒப்படைப்பதில் ஒத்துழைக்குமாறு பாகிஸ்தானை இந்தியா கேட்டுள்ளது.

இந்த அறுவரும் கடந்த 17 ஆம் திகதியன்று துபாயில் இருந்து விமானமூலம் கராச்சி போய்ச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேமன் குடும்பத்தினர் இந்தியப் பிரஜைகளாக இருப்பதால், அவர்களை இந்திய புலன் விசாரணை அதிகாரிகளிடம் ஒப்படைப்பதில் நட்பு நாடுகள் ஒத்துழைக்கும் என்று இந்தியா எதிர்பார்ப்பதாக வெளியுறவு அமைச்சர் தினேஷ் சிங் நேற்று ராஜ்ய சபையில் தெரிவித்தார். (இ)

### போலி நோட்டு...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரை விளக்கமறியலில் இருக்கும்படி உத்தரவிட்டார்.

சந்தேகநபர் போலி கரன்ஸி நோட்டுகளை வெளிநாடு ஒன்றில் [illegible] குள் கடத்தி வந்தார் என்று [illegible] நம்பப்படுகிறது. (இ-எ)

# மின்சாரக் கட்டணம் 30 சதவீத உயர்வு

கொழும்பு, மார்ச் 25

அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் மின்சாரக் கட்டணம் 30 சத விகிதத்தால் அதிகரிக்கப்படவுள்ளது.

இலங்கை மின்சார சபை இது சம்பந்தமான முடிவு எடுத்துள்ளது.

இதற்கு அரசு அங்கீகாரம் கிடைத்தவுடன் இலங்கை மின்சார கம்பெனியும் இதே விதமான கட்டண அதிகரிப்பை மேற்கொள்ளவிருக்கிறது.

மண்ணெண்ணெய், டீஸல் மற்றும் பாண் மீதான மான்யத்தை இலங்கை அரசு நீக்க வேண்டும் என்றும் மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க வேண்டும் என்றும் சர்வதேச நாணய நிதியம் வேண்டுகோள் விடுத்திருந்தது.

இந்த வேண்டுகோள் இலங்கை அரசினால் முதலில் நிராகரிக்கப்பட்ட போதிலும் தற்போது மின்சாரக் கட்டணத்தை மட்டும் அதிகரிக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண்ணெண்ணெய், டீஸலில் லீற்றருக்கு 3 ரூபா வீதம் அரசு நட்டமடைந்து வருகின்றது.

இந்த மான்யத்தையும் பாணுக்கு வழங்கப்படும் மான்யத்தையும் உடனடியாக நீக்க வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் வற்புறுத்துகின்றது.

மாகாண சபைத் தேர்தலை அரசு நடத்தவிருக்கும் இத்தருணத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் கோரிக்கைகள் அனைத்தையும் ஏற்பது ஜனாதிபதி பிரேமதாஸா அரசுக்கு தற்கொலை நடவடிக்கையாக முடியும் என அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

### முதலுதவி சிகிச்சை

முல்லைத்தீவு மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் கால் நடை வளர்ப்பிற்கு பல முன்னோடித் திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறது. அங்கு கால்நடைகளுக்கு முதலுதவிச் சிகிச்சைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

குறிக்கப்பட்ட காலங்களில் கால்நடைகளுக்கு பரவும் தொற்று நோய்களை இனங்கண்டு, தடுப்பூசிகள் போடும் வேலையை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் செயற்படுத்தி வருகின்றது.

### பூஸா முகாமில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படவில்லை.

மீண்டும் 1993 பெப்பிரவரியில் ஜனாதிபதிக்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும், எதிர்க் கட்சித் தலைவிக்கும், தேசிய மற்றும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளுக்கும் இதே போன்ற மனுவை அனுப்பினோம்.

எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, மற்றும் வாசுதேவ நாணயக்கார, தினேஷ் குணவர்த்தனா, நிஹால் பெரேரா, ஜே. பி. சில்வா, பேர்னாட் சொய்ஸா, ஆரிய பொலகொட, லலித் அத்துலத் முதலி போன்ற எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் எமது மனுக்களை அனுப்பினோம். ஆனால் பயன் கிடைக்கவில்லை.

எமது விவகாரத்தை நாடாளுமன்றத்தில் கிளப்புமாறு கோரி, எதிர்க் கட்சி எம்.பிக்கள் 26 பேருக்கும் எமது மனுக்களை அனுப்பி வைத்தோம். ஆனால் அவர்கள் கூட ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்நிலையில் வேறு வழியின்றி பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக சாகும் வரை உண்ணா விரதம் இருக்கும் போராட்டத்தில் குதிக்க முடிவு செய்துள்ளோம் — என்று தெரிவித்தனர். (உ-6)

★ பழனி இடைத்தேர்தலில்

# தி.மு.க. வேட்பாளராக சுப்புலட்சுமி ஜெகதீசன்

சென்னை, மார்ச் 25

ஒத்திவைக்கப்பட்டிருக்கும் பழனி நாடாளுமன்ற இடைத் தேர்தலில் தி.மு.க. வேட்பாளராக திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் போட்டியிடுவார்.

தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி இந்த அறிவிப்பை அண்மையில் விடுத்தார்.

முன்னாள் தி.மு.க. அமைச்சரான சுப்புலட்சுமி ஜெகதீசனும் அவரது கணவர் ஜெகதீசனும் விடுதலைப் புலிகளுக்கு உதவினார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் "தடா" சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, நீண்ட காலம் சிறை வைக்கப்பட்ட பின்னர் அண்மையில் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர் என்பது தெரிந்ததே.

ஈ பி.ஆர் எல் எவ். தலைவர் பத்மநாபாவும் அவரது சகாக்களும் கொலை செய்யப்பட்ட சம்பவத்துக்குப் பொறுப்பான சந்தேக நபர்களுக்கு புகலிடம் கொடுத்ததாகவும் இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது.

கடந்த பெப்ரவரி நடுப்பகுதியில் பழனி இடைத்தேர்தல் நடைபெற இருந்ததும் —

வேட்புமனு தாக்கல் செய்வதற்கான தினத்தன்று இடைத்தேர்தல் நடைபெறுவது ஒத்திவைக்கப்பட்டிருப்பது பற்றிய அறிவிப்பு வெளியானதும் தெரிந்தவையே.

இடைத்தேர்தல் ஒத்திவைக்கப்பட்டிருப்பது பற்றிய அறிவிப்பு வெளியாவதற்கு முன்னர், இடைத்தேர்தலில் தி.மு.க. வேட்பாளராக சுப்புலட்சுமி ஜெகதீசன் போட்டியிடுவார் என மு. கருணாநிதி அறிவித்திருந்தார். (உ)

## இ. தொ. கா தேர்தல்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரேமதாஸா தலைமையிலான அரசாங்கம் அதற்குப் பதிலாக தோட்டத் தொழிலாளருக்கு பெருமளவு சலுகைகளை வழங்க வேண்டும் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கோரியுள்ளது.

முடிவுகளை நிர்ணயிக்கும் சக்தி

எதிர்வரும் மே மாதம் தேர்தல் நடைபெறவிருக்கும் ஏழு மாகாணசபைகளில் மூன்றில் தேர்தல் முடிவுகளை நிர்ணயம் செய்யும்சக்தியை தோட்டத் தொழிலாளர்கள் பெற்றுள்ளனர். மத்திய மாகாணம், ஊவா மாகாணம், சப்ரகமுவ மாகாணம் ஆகியனவே அந்த மூன்றுமாகும்.

★ தோட்டத் தொழிலாளருக்கு மாதத்தில் குறைந்தது 26 நாட்கள் வேலை வழங்கப்பட வேண்டும்:

★ தோட்டப் பகுதிகளில் தொழிலாளர்கள் சொந்தமாக நிலம் வைத்திருக்கவும் வீடுகள் கட்டவும் உரிமை அளிக்கப்பட வேண்டும்.

இ. தொ. கா. முன்வைத்துள்ள கோரிக்கைகளில் மேற்கூறப்பட்டவை முக்கியமானவையாகும்.

தமது முக்கியமான கோரிக்கைகளை பிரேமதாசா அரசாங்கம் நிறைவேற்றாது விட்டால் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் தனியாக தமது வேட்பாளர்களை நிறுத்தப் போவதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

1988 ஜனாதிபதி தேர்தலில் திரு. பிரேமதாஸா வெற்றியீட்டியதற்கும் அடுத்து [illegible] நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்றதற்கும் தோட்டத் தொழிலாளர்களின் வாக்குகளே முக்கியமாக இருந்தன.

தொண்டாவின் குற்றச்சாட்டு

வடக்கு-கிழக்கு யுத்தத்தை பேச்சுகள் மூலம் முடிவுக்குக் கொண்டுவராததற்காக சமீப காலமாக அரசாங்கத்தைத் தொண்டமான் குற்றஞ்சாட்டி வருகிறார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரனுடன் பேச்சுகள் நடத்தப்பட வேண்டும் என்றும் தொண்டமான் வலியுறுத்தி வருகிறார். வடக்கையும் கிழக்கையும் பிரிப்பதைத் தொண்டமான் எதிர்த்து வருகிறார்.

தோட்டத் தொழிலாளரின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதன் மூலம் அவர்களின் ஆதரவு கிடைத்தாலும் அதனால் அதே மாகாணத்தில் உள்ள பெரும்பான்மைச் சிங்களவரின் ஆதரவை ஐக்கியதேசியக்கட்சி இழக்க நேரிடும்.

கவலை

மத்திய தோட்டமாவட்டங்களில் உள்ள சிங்கள பௌத்த அமைப்புகள் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் வலிமையையும் ஆளும் கட்சியுடன் பேரம் பேசிவரும் ஆற்றலையும் கண்டு கவலைப்படுகின்றன.

மத்திய மலைப் பகுதிகளில் தனியான தமிழ் மாநிலத்தை உருவாக்கி, அதனை வடக்கிலும் கிழக்கிலும்உள்ள தமிழ்ப் பிரிவினைவாதிகளுடன் தொடர்புகொள்ளும்படி செய்யும் முயற்சியில் அமைச்சர் தொண்டமான் ஈடுபட்டுள்ளார் என்று இப்பகுதியிலுள்ள பௌத்த குருமார்கள் கூறுகின்றனர்.

தோட்டத் தொழிலாளருக்குச் சலுகை வழங்கப்படுவதை பிரதானமாக சுதந்திரக் கட்சி எதிர்க்கிறது.

மத்திய மாகாணத்தில் தனித்தமிழ் மாநிலத்தை ஏற்படுத்தும் முயற்சிகளுக்கு இச்சலுகைகள் வழிவகுக்கும் என்று பௌத்த குருமார்கள் பீதி கொண்டுள்ளனர்.

இத்தகைய பின்னணியிலும் இ. தொ. காவின் கோரிக்கைகளால் எழுந்துள்ள நெருக்கடியைத் தீர்த்து மாகாணசபைத் தேர்தல்களில் அதன் ஆதரவைப் பெற்றுக்கொள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் இ. தொ. காவுடன் கடந்த ஒரு வாரமாகப் பேச்சு நடத்தி வருகின்றனர். (அ-எ)

### ராணுவப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நேரத்தில் இராணுவத்தினர் தொல்லை கொடுத்து வருவதாகவும் —

இதனால் அங்கு மக்கள் அச்சத்துடன் வாழ்வதாகத் தெரிவிக்கப்பட்டதாகவும் மக்கள் சிறைக் கைதிகள் போல வாழ்கின்றனர் என்றும் அவர் கூறினார். (இ-5)

### பூஸா ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்யவேண்டும்.

★ அத்தகைய வழக்கு தாமதமின்றி விசாரணை செய்யப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

★ வழக்கு விசாரணை தாமதமாகுமாயின் குற்றம் சுமத்தப்பட்டவரை உடன் பிணையில் விடுவிக்கவேண்டும்.

—இவையே நான்கு கோரிக்கையுமாகும். (உ-6)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் -.-03-1993இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org